# தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும் - தமிழர் வணிகம், தொல்லியல் ஆய்வுகள், கடற்பயணங்கள் தொடர்பான செய்திகள்

## தொல்லியல் ஆய்வுகள்

"நல்லிசைக் கடாம்புனை" எனத்துவங்கும் பாடல் குறிப்பிடும் சங்ககால மன்னன் - நன்னன்
பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய நூல் - மலைபடுகடாம்
"நல்லிசைக் கடாம்புனை" எனத் துவங்கும் கல்வெட்டு எழுதப்பட்ட காலம் - கி.பி. 13-ம் நூற்றாண்டு; கண்டெடுக்கப்பட்ட இடம் - திருவண்ணாமலை.
தொல்லியலின் ஆங்கிலச் சொல் - ஆர்க்கியாலஜி
பூம்புகார் அருகே கடல் அகழ்வாய்வில் கி.மு. 3-ம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்ட இடம் - கீழார்வெளி; ஆண்டு - 1963
இறந்தோரை அவர்கள் பயன்படுத்திய பொருட்களுடன் ஒரு தாழியிலிட்டு புதைக்கும் வழக்கத்திற்கு "முதுமக்கள் தாழி" என்று பெயர்.
முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்ட இடம் - தூத்துக்குடி மாவட்டம் , ஆதிச்சநல்லூர்; கண்டெடுக்கப்பட்ட ஆண்டுகள் - 1876, 2003.
தருமபுரி, கரூர், மதுரை -யில் கி.மு.3- ஆம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலகட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு காசுகள் கண்டறியப்பட்டுள்ளன.
கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளின் காலம் - கி.மு 300 முதல் கி.பி. 300 வரை.

## கடற்பயணங்கள்

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" எனும் ஔவையார் கூற்றும், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் கணியன் பூங்குன்றனார் மொழியும் தமிழர்களின் பன்னாட்டுத் தொடர்புக்கு சான்றாகும்.
தொல்காப்பியத்தில் தமிழர் பிற நாடுகளுக்கு கடற்பயணம் மேற்கொண்ட செய்தி "முந்நீர் வழக்கம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
பழந்தமிழரின் பொருளீட்டும் கடமையை தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள 'பொருள்வயிற் பிரிவு' விளக்குகிறது.
இப்பிரிவு காலில் பிரிவு (தரைவழிப் பிரிதல்), கலத்தில் பிரிவு (நீர்வழிப் பிரிதல்) என இருவகைப்படும்.

தமிழர் மேற்கில் கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கில் சீனம் வரை கடல்வழி வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.
கிரேக்கரையும் உரோமானியரையும் "யவனர்" என்று அழைத்தனர்.

கப்பல்களைக் கட்டுவதற்கு "கலம்செய் கம்மியர்" என ஒருவகைத் தொழிலாளர் தமிழகத்தில் இருந்தனர்.
நான்கு புறம் நீர் நிரம்பிய கழனிகளும், நடுவில் மதிலுடனும் கூடிய மருதநில அரசனது கோட்டை, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாக புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.
**கடல் - வேறுபெயர்கள்:**

ஆழி
ஆர்கலி
முந்நீர்
வாரணம்
பௌவம்
பரவை
புணரி

**மரக்கலம் - வேறுபெயர்கள்:**

- கப்பல்
- கலம்
- கட்டுமரம்
- நாவாய்
- படகு
- பரிசில்
- புணை
- தோணி
- தெப்பம்
- திமில்
- அம்பி
- வங்கம்
- மிதவை
- பஃறி
- ஓடம்
- புகார் நகரில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைபுரண்டு தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைய, அவற்றின் உச்சியில் கொடிகள் ஆடின என்று பட்டினப்பாலை கூறுகின்றது. கரிகாலன் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என்று புறநானூறு பாடுகிறது.

**துறைமுகங்கள்:**

காவிரிப்பூம்பட்டினம்
முசிறி
கொற்கை
ஆகிய துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின.
முசிறி - சேர மன்னர்க்குரிய துறைமுகம்

முசிறியில் உள்ள சுள்ளி ஆற்றில் மரக்கலங்களில் வந்த யவனர்கள் பொன்னைக் கொடுத்து அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றனர் என்கிறது அகநானூறு.

**கொற்கை - பாண்டியர் துறைமுகம்**

இங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடந்ததை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார்.
சிறுபாணாற்றுப்படையும், "விளைந்து முதிர்ந்த விழுமுத்து" என மதுரைக்காஞ்சியும் கொற்கை முத்தினை சிறப்பிக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினம் - சோழர் துறைமுகம்
கப்பலில் இருந்து இறக்கப்படுவன, நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவன என அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் கிடக்கும் என்கின்றன இலக்கிய நூல்கள்.
பழந்தமிழகத்தின் வணிகப் பொருள்கள் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன.

ஏற்றுமதியான பொருட்கள்: இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப் பட்டை, இஞ்சி ஆகியன.
இறக்குமதியான பொருட்கள்: சீனத்திலிருந்து பட்டும், சருக்கரையும்.
அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவில் இருந்து கரும்பு கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

"மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்" - பாரதியார்